பக்கங்கள்: ஆறு

அன்பளிப்பு

File (3)

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 30 வெள்ளிக்கிழமை (12-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 137

# படை நடவடிக்கை வலிகாமத்தில் பூர்த்தி

## பதில் ராணுவத் தளபதி நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 12

**ஸ்ரீலங்காப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ள வலிகாமம் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளை முற்றாக வெளியேற்றும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ''சூரியப் பிரகாசம் - 5'' இராணுவ நடவடிக்கை பூர்த்தியடைந்திருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.**

இந்த வாரத்துடன் முடிவடைந்த இந்த ஒரு வார கால நடவடிக்கையின் போது, வலிகாமம் பகுதியில் இருந்து புலிகள் முற்றாக வெளியேற்றப்பட்டு விட்டனர் என்று பதில் ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்த கூறியுள்ளார்.

குடாநாட்டில் யாழ். நகரம், ஆனையிறவு மற்றும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வலிகாமம் கிழக்கில் மோதல்

மந்திகை, ஏப். 12

வலிகாமம் கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணிக்கு இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றதாக தெரியவருகிறது.

புத்தூர் கிழக்குப் பகுதியிலேயே இம் மோதல் இடம் பெற்றது.

இச்சம்பவத்தின் போது அப்பகுதியில் தொடர்ச்சியான ஷெல், பீரங்கிச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

இந்தமோதலின் போது ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை (இ-15)

# ராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

## யாழ்.பிரஜைகள் குழு நெல்சன் மண்டேலாவுக்கு கடிதம்

சாவகச்சேரி, ஏப். 12

ஸ்ரீலங்கா அரசு தமிழர்களுக்கு எதிராக இழைத்து வரும் துன்பங்களை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டுவருவதிலும் — தமிழர் தாயகம் மீது ஸ்ரீலங்கா அரசு நிகழ்த்தி வரும் ராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்துவதிலும் — தங்கள் நல்லெண்ண, செல்வாக்கை வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணம் பிரஜைகள் குழு, தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மேற்கண்டவாறு

(5 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்புப் பகுதியில் காவலரண் தாக்கி அழிப்பு!

## சிப்பாய், ஊர்காவலர் பலி!!

சாவகச்சேரி, ஏப். 12

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் புறமான ஜேந்தியா என்னும் இடத்தில் நேற்றுக் காலை 6-15 மணி அளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஓர் ராணுவச் சிப்பாயும் ஓர் ஊர்காவல் படையினரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓட்டம் பிடித்தனர்.

காவலரண் முற்றாக அழிக்கப்பட்டது.

30 நிமிட நேரம் நீடித்த இத்தாக்குதலின் போது புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலின் போது புலிகளினால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

காவலரணுக்கு முன்னால் வைத்து இத்தாக்குதல் நடத்தப் பட்டது.

படையினர் இரவு வேளையில் வெளியேறி வேறு இடத்தில் காவல் கடமையில் ஈடுபட்டுவிட்டு காலையில் மீண்டும் தமது காவலரண் நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் புலிகள் இத்தாக்குதலை நடத்தி இருந்தனர்.

இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி முகாமிலிருந்து நேற்றும் ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 7மணிக்கு வாதரவத்தை, கப்பூது, தொண்டமானாறு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை வலிகாமம் கிழக்கு பகுதிகளில் இருந்து பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்கு பகுதிகளில் பயங்கர குண்டுச்சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

அடிக்கடி தொடர்ச்சியாக இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புகள் மாலை வரை தொடர்ந்த வண்ணமிருந்தன.

குண்டுச் சத்தங்களுக்கு மத்தியில் விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானம் ஒன்று பிற்பகல் 1.30 மணிக்கு வலிகாமம் கிழக்கு, வடமராட்சி மேற்கு, வடக்கு கரையோரப் பகுதிகளில் வட்டமிட்டு பறந்து சென்றது.

விமானப்படையினரின் விமான ரோந்து நடவடிக்கை கடந்த சில நாள்களாக தொடர்ந்து இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

(இ-173-15)

# முஸ்லிம் காங்கிரஸின் நான்கு அம்சத் திட்டம்

## தமிழ்க் கட்சிகளிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப். 12

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான 4 அம்சத் திட்டம் ஒன்றை தமிழ்க் கட்சிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்துள்ளது.

கடந்த புதன்கிழமை தமிழ்க் கட்சிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது இந்தத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சந்திப்பு மிகவும் சுமுகமாக நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8)

# தமிழருக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்படுகிறது

## ந. ச. ச. கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

சாவகச்சேரி, ஏப். 12

யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்று ஓயாது ஸ்ரீலங்கா அரசாங்கம் கூறிவருகின்ற போதும், உண்மையில் அது தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே நடத்தப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் நவசமசமாஜக் கட்சி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் இந்தியன் பிஸ்னஸ் வீக் சஞ்சிகையின் பிரதான ஆசிரியருக்கு இனப்பிரச்சினை தொடர்பாக நியாயமற்ற முறையில் ஜனாதிபதி வழங்கிய பேட்டிக்கு கடுமையான எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் மூலம் தமக்கு விமோசனம் எட்டுமென எண்ணினர்.

ஆனால் தற்போதைய நிலையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் கீழ் தமது தலைவிதி முன்னரை விட மோசமாகி உள்ளது என்பதை அவர்கள் உணருகின்றார்கள்.

அரசாங்கப் பேச்சாளர்களினதும் மற்றும் அரச அதிகாரியினதும் சொல்லும் செயலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் இருந்ததை விட மிக கூடுதலான அளவு தமிழ் மக்களை அவமானத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அத்தாவுடவுக்கு எதிராக கட்சி ஒழுங்கு நடவடிக்கை

அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதும் அமுல் செய்வது தொடர்பான பிரேரணையின் போது அரசுக்கு ஆதரவாக வாக்களித்த லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உள்ளது.

வாசுதேவ நாணயக்கார உட்பட கட்சியின் ஏனைய நான்கு உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MEDICAL STUDENTS' GENERAL BODY MEETING

There will be a meeting of the medical students about the future academic procedures.

VENUE:- Chavakachcheri Hindu College.

TIME:- 14 th April, Sunday, 9. 30 A. M.

We are requesting all the medical students to be present.

— MEDICAL STUDENT UNION —

(41516)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## மருத்துவபீடப் பரீட்சைகள்

ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த மூன்றம் ஆண்டு (பகுதி 1) மருத்துவமானி, சத்திரசிகிச்சைமானி பரீட்சையும், ஏப்ரல் 29 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இரண்டாம் ஆண்டு மருத்துவமானி, சத்திரசிகிச்சைமானி (மீள்) பரீட்சையும் முறையே மே மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமையும், மே மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமையும் ஆரம்பமாகும். இப்பரீட்சைகள் சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும். மேற்குறிப்பிட்ட பரீட்சைகளுக்குரிய நேர அட்டவணைகளையும், அனுமதி அட்டையையும் சாவகச்சேரி/ கைதடியில் அமைந்துள்ள பல்கலைக்கழகக் காரியாலயம், கிளிநொச்சி விவசாய பீடம், வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி ஆகிய இடங்களிற் பரீட்சை தொடங்கும் திகதிக்கு பத்து நாள்கள் முன்னதாக பெற்றுக்கொள்ளலாம். முன்னைய வேண்டுகோளின்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்கள் சாவகச்சேரி / கைதடி அலுவலகத்திலோ, கிளிநொச்சி அலுவலகத்திலோ விண்ணப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

(C/4189) பதிவாளர்.

31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 27 — 02 — 1947



உதிர்வு: 13 — 03 — 1996

திருமதி

### ஜெயலக்க்ஷமி இருபானந்தன்

(புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம்)

ஆறாத் துயர் இனியும் ஆறாது
அன்பான எம் குடும்பத்தில்
முதல் வந்த குல விளக்கே!
அன்பு கருணை பாசங்கொண்டு
பண்புடன் எம்மை எல்லாம்
நல்வழிப்படுத்திய உம்மைப் பிரித்த - காலன்
தவறாகப் போட்டிட்ட கணக்கதனால்
நேசமதை விட்டு இறைவனடி சேர்ந்தீரோ.

எம் கண்மணியை இழந்து தவித்த வேளையில் எம் துக்கத்தில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

தந்தை, தாய்,
சகோதரன், மைத்துனி.

தகவல்:
கனகலிங்கம்
(சிங்கப்பூர் போசன சாலை)
சந்தை வீதி,
கொடிகாமம்.

(41513)

## நாற்றுக்கள் விற்பனைக்கு

இரணைமடுவில் அமைக்கப்பட்ட ''பசுந்தளிர்'' விதை நடுகைப் பொருள் மாதிரிப் பண்ணையில் இருந்து, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதியினர் பழமரக் கன்றுகளை நியாய விலையில் மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

மேற்படி பண்ணையில் திருநெல்வேலி கத்தரி, கிட்டுப்பப்பாளி, அகத்தி ஆகிய நாற்றுக்களை பெற்று பயனடையுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கிளிநொச்சி வருகை

கிளிநொச்சி, ஏப். 12

சுகாதாரம் மற்றும் நீர் நிலைகள் சம்பந்தமாக ஆராய்வதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதி பற்றிக்ட ஒஸ்ற் கொழும்பிலிருந்து கிளிநொச்சி வந்தார். (இ-124)

## செய்திட்டம் சமர்ப்பிக்க கோரிக்கை

சாவகச்சேரி, ஏப். 12

தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்புளோமா இறுதிப் பரீட்சை எழுதிய ஆசிரிய மாணவர்களில் இதுவரை செய் திட்டத்தை சமர்ப்பிக்காதவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் அலுவலகத்தில் அதைச் சமர்ப்பிக்குமாறு வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். (இ-3)

## தவற விடப்பட்ட பொருள்கள்

சாவகச்சேரி, ஏப். 12

சாவகச்சேரியில் இயங்குக் யாழ். செயலக ஒய்வூதியம் கிளையில் ஏ. ஆசீர்வாதம் என்பவரது அடையாள, ஒய்வூதிய அட்டைகளும் வேறொருவரின் மூக்கு கண்ணாடி ஒன்றும் கண்டெடுத்து வைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## சுட்டிபுரத்தில் சுதேசிய திருநாள்

சாவகச்சேரி, ஏப். 12

அரியாலை 77 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா சித்திரைப் புத்தாண்டு தினமான நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுட்டிபுரம் அம்மன் ஆலயத்தில் பூசையும், பிரார்த்தனையுடன் அமைதியான முறையில் கொண்டாடப்படவிருக்கிறது.

அதனைத்தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு வரணி மத்திய மாகவித்தியாலயத்தில் பொதுக் கூட்டமும் நடைபெறும்.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-3)

அத்தியடி

சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய 13-04-96

## இரதோற்சவத்தை முன்னிட்டு

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் **13 - 04 - 96** சனிக்கிழமை நண்பகல் **12** மணிக்கு

சிவஸ்ரீ ந. இராசேஸ்வரக் குருக்கள்
தலைமையில்
பஞ்சமுகார்ச்சனை நடைபெறவுள்ளது.

பக்தர்கள் அனைவரையும் கலந்து கொண்டு விநாயகர் அருள்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழா உபயகாரர்கள்

வி. ஸ்ரீசக்திவேல்,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(41517)

பருத்தித்துறை கொட்டடி

சித்தி விநாயகர் கோவில் பரிபாலனசபை

## 1996 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் ஆலய வசந்த மண்டபத்தில் புதுவருடப்பிறப்பு தினத்தன்று காலை 8மணிக்கு நடைபெறும். சகல பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

க. நாகேந்திரன்
செயலாளர்

இந்து சலாசார அமைச்சு பதிவு இலக்கம்:- HA/5/JA/657

(40432)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி காசிநாதர் ஆச்சிமுத்து

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த திருமதி காசிநாதர் ஆச்சிமுத்து 10-04-1996 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதரின் அன்பு மனைவியும், மயில்வாகனம், கணேசபிள்ளை, இராசேஸ்வரி, சறோஜினிதேவி, கமலாதேவி, காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தங்கவேலு, செல்வரத்தினம், புவீந்திரராசா, மோகனராணி, ஆனந்தராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சண்முகநாதன், தெய்வேந்திரம் ஆகியோரின் சிறியதாயாரும், கதிர்காமநாதன், நாகேஸ்வரி, சிவநாதன், சிவகரன், ரதிமலர், நகுலேஸ்வரி, தனேஸ்வரி, புஸ்பராசா, யசிந்தன், வசந்தா, பிரபாகரன், கவிதா, விஜிதா, தனலட்சுமி, தவராசா, தனப்பிரியா, தவரஞ்சினி, சுவேதிகா, கௌசலா, கௌரிநாத், பிரியந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-04-96இல் வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கா. கணேசபிள்ளை

ஆஸ்பத்திரி ஒழுங்கை,
தவராசா வீதி, கரம்பக்குறிச்சி,
வரணி.

(41372)

### திருமதி தம்பையா பொன்னம்மா

திருமதி தம்பையா பொன்னம்மா (தும்பளை, பருத்தித்துறை) 10 - 04 - 96 அன்று காலமானார்.

அன்னார் அமரர் தம்பையாவின் அன்பு மனைவியும், ஜெயதா (லலிதா), சிவஞானசுந்தரம் (வர்த்தகர், கொழும்பு), சாம்பசிவம் (வர்த்தகர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜலிங்கம் (பிரபல வர்த்தகர், பருத்தித்துறை), ஜெகதாம்பிகா (லண்டன்), சுகிர்தா (சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயராஜ் (வர்த்தகர், சிவா ரேடிங் கம்பனி, பருத்தித்துறை), நிர்மலா (ஆசிரியை யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), சிவராஜ் (கனடா), துஷ்யந்தன் (லண்டன்), கிரிதரன் (லண்டன்), வசீகரன் (லண்டன்), ஸ்ரீபானு (கொழும்பு), சிவயானு (சுன்னாகம்), சிவானு (சுன்னாகம்), அமரநாத் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11- 04 -96 தும்பளையில் அவரது இல்லத்தில் நடந்தேறின என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திரு. திருமதி இராஜலிங்கம்
ஜெயராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.தொ.கா. வேலை நிறுத்தத்தால் தோட்டத் தொழிற்றுறை ஸ்தம்பிக்கும்

## 7 லட்சம் தொழிலாளர் போராட்டத்தில் குதிப்பர்

கொழும்பு, ஏப். 12

தோட்டத் தொழிலாளருக்கு அதிக சம்பளம், அதிக வேலைநாள்கள் ஆகியவை வழங்கப்படவேண்டும் என்று கோரி அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்த உத்தேசித்திருக்கும் ஒரு வாரகால அடையாள வேலை நிறுத்தத்துக்கு 16 தோட்டத் தொழிற்சங்கங்களின் ஐக்கிய அமைப்பான தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்க கூட்டுச் சம்மேளனமும் முழு ஆதரவு தெரிவித்திருப்பதை அடுத்து—

ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை முழு மலையகத் தேயிலைத் தோட்டங்களும் செயல் இழக்கும் என நம்பப்படுகின்றது.

இந்தச் சங்கங்களைச் சேர்ந்த — ஏழு லட்சத்துக்கும் அதிகமான — தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றாக வேலை நிறுத்தத்தில் குதித்தால் அது அரசுக்குப் பேரிடியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு எம். எஸ். செல்லச்சாமி தலைமையிலான இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸும் ஆதரவளித்துள்ளது.

(உ)

# செஞ்சிலுவைச் சங்கம் பவுஸர் மூலம் தண்ணீர்

தென்மராட்சி, ஏப். 12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தனங்கிளப்பு, அறுகுவெளி, சரசாலை, மட்டுவில் ஆகிய பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீர் வழங்கி வருகின்றனர்.

கனடாவில் வசிக்கும் தென்மராட்சிப் பகுதி வாசிகளால் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு லட்சம் ரூபா இந்த குடிதண்ணீர் விநியோகத்துக்குப் பயன்படுத்தப்படும்.

சாவகச்சேரியிலிருந்து தினமும் காலையும் மாலையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தண்ணீர் பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் தனங்கிளப்பு, அறுகுவெளி ஆகிய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு மக்களுக்கு வழங்கப்படுகிறது.

தற்போது நாவற்குளி கேரதீவு வீதியில் உள்ள தச்சன் தோப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி, தனங்கிளப்பு, அறுகுவெளி ஆகிய பகுதிகளில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் நடமாடும் பாற்சாலை

வன்னிப் பெருநிலப்பரப்பில் பெருமளவில் கிடைக்கும் பாலின் பயனை உச்சப்பயன்பாட்டுக்கு கொண்டுவரும் நோக்கிலும் —

உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் — கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாக நடமாடும் பாற்சாலை ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவுபதனிடல் பகுதியினர் ஆரம்பித்துள்ளனர். [இ]

# இரத்ததானம்

வடமராட்சி, ஏப். 12

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் எண்மர் நேற்று முன்தினம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர்.

இங்கு நிலவிய இரத்தத் தட்டுப்பாட்டையடுத்தே இம் மாணவர்கள் இரத்ததானம் செய்தனர். (இ-173)

# மூன்று மாத சம்பள முற்பணம்

தென்மராட்சி, ஏப். 12

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய சுகாதார திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மூன்று மாத சம்பள முற்பணம் சித்திரைப் புத்தாண்டின் பின்னர் வழங்கப்படும்.

அண்மையில் திருகோணமலைக்கு சென்ற யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதம், கணக்காளர் எஸ். சண்முகரத்தினம் ஆகியோர் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி சம்பள முற்பணம் வழங்குவதற்கு அனுமதி பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த நவம்பர் மாதம் இச்சம்பள முற்பணம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-117)

# அரச பயங்கரவாதத்திற்கு அரசு திட்டமிடுகிறது

## ஜே. வி. பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 12

அவசரகாலசட்ட விதிகளின் கீழ், அரச பயங்கரவாதத்தை அரசியலுக்குள் புகுந்த அரசு முயல்கிறது.

ஜே. வி. பி. செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

அரச பயங்கரவாதத்தை உள்ளூராட்சித் தேர்தலில் பிரயோகப்பதன் மூலம் அதிகாரப்பரவல் யோசனை சட்டமாகும் போது எழக்கூடிய எதிர்ப்பையும் அரசாங்கத்தால் சமாளிக்க முடியும்.

மக்களின் எதிர்ப்புக்களையும் ஆர்ப்பாட்டங்களையும் அரசு அவசர காலச்சட்டத்தின் கீழ் முறியடிக்க முயல்கிறது என்றும் அவர் கூறினார்.

(இ-3-6)

# பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்

சாவகச்சேரி ஏப். 12

மாகாண பிரதி, சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியகலாநிதி, க. தா. சிவபாதம் நியமிக்கப் பட்டுள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் 14 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரத்தக்கதாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(உ-13)

# கிழக்கில் புலிகளின் தாக்குதலுக்கு 'ஒற்றைக் கண் ஜாக்' தலைவராம்!

கொழும்பு. ஏப், 12

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படைகள் மீதும் பொலீசார் மீதும் ஒரே நேரத்தில் தாக்குதலை மேற்கொள்ளுவதற்காக வன்னியிலிருந்து 'ஒற்றைக் கண் ஜாக்' என்பவரது தலைமையில் விடுதலைப் புலிகளின் படையணி ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணப் பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் இவ்வாறு தெரிவிப்பதாக 'திவயின' சிங்கள நாளிதழ் குறிப்பிட்டுள்ளது

'வன்னியிலிருந்து படையணி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்ற தகவல் எமக்குக் கிடைத்துள்ளது. நாங்கள் இது பற்றி விமானப் படையினர் உட்பட பாதுகாப்புப் படைப் பிரிவுகளுக்குத் தெரிவித்துள்ளோம்' — என கிழக்கு மாகாண மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளாராம்.

இந்த 'ஒற்றைக் கண் ஜாக்' என்பவர் பாதுகாப்புப் படையினருடன் ஏற்பட்ட மோதலொன்றில் பலத்த காயங்களுக்குட்பட்டு தற்போது உடல் நிலை தேறியவரெனவும் அவருக்கு ஒரு கண் இல்லை என்றும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

(உ-10)

## இடம்பெயர்ந்தோர் வழிபாட்டுக்கு

# வன்னியில் பிரதிஷ்டை செய்ய 23 விக்கிரகங்கள்

சாவகச்சேரி, ஏப். 12

இறைவழிபாட்டுக்கு ஆலயங்கள் இன்றி அமையாதவை. அதனால் வன்னியில் மக்கள் நெருக்கமாகக் குடியேறியுள்ள பகுதிகளில் ஆலயங்களை அமைப்பதற்காக இருபத்து மூன்று நாகதம்பிரான் விக்கிரங்களையும் விசேட பூசையில் வைத்துள்ளோம்.

இவை வன்னியில் நாளை 23 ஆலயங்களாக ஒளியெற்று எமது சமயம் வாழ உதவும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

வன்னியில் பல பகுதிகளிலும் மக்கள் புதிதாகக் குடியேறியுள்ள பகுதிகளில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ள 23 விக்கிரகங்களுக்கான சிறப்பு பூசை வழிபாடு அண்மையில் உசன் கந்தசாமி கோவிலில் இடம்பெற்றது.

அந்த வழிபாட்டின் பின் நடைபெற்ற நிகழ்வுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே துர்க்காதுரந்தரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம் முன்னோர் காலம் காலமாக கட்டி வளர்த்த சைவப் பாரம்பரியத்தை நாம் எங்கு தான் வாழ்ந்தாலும் மறக்கக் கூடாது.

இந்துக்கள் என்ன இடர் வரினும் இந்துப் பாரம்பரியத்தையும் இறைவழிபாட்டையும் பேண வேண்டும் — என்றும் அவர் சொன்னார்.

எமது நாடு எத்தனையோ அன்னியர் ஆட்சிகளையும், படையெடுப்புகளையும் எதிர்கொண்டபோதும் ஆன்மீகப் பலமுடைய இந்துக்கள் தமது மதத்தை அழியவிடாது காத்தனர். இன்று இடம்பெயர்ந்து நாம் சொல்லொணாத் துன்பங்களுடன் வாழ்ந்தாலும் மதப் பற்றை மறந்துவிடக் கூடாது.

இடம்பெயர்ந்தவர்கள் ஆலய வழிபாடு இயற்றமுடியாத நிலையை நீக்குவதற்காகவே இந்தப் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம் — என்று திரு. ஆறு. திருமுருகன் பேசும்போது தெரிவித்தார்.

விக்கிரகங்களை வன்னிக்கு எடுத்துச் சென்று பிரதிஷ்டை செய்வதற்கான ஒழுங்குகள் குறித்தும் இந்நிகழ்வில் ஆராயப்பட்டது. [அ]

# தொலைக்கல்வி ஆசிரியர் செயலமர்வு

சாவகச்சேரி, ஏப். 12

யாழ். வலயம் ஒன்றைச் சேர்ந்த 92/95, 94/96ஆம் ஆண்டுக்குரிய தொலைக் கல்வி பயிலுனர் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர் வரும் 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை காலை 8-30 மணி முதல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும். (இ-3)


உ

அரியாலை

77 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா- 1996

காலம்: தாது வருடம் சித்திரை 1 ஆம் திகதி (13-04-1996) சனிக்கிழமை

பி. ப.: 2-30: மணி பூசையும் பிரார்த்தனையும்— சுட்டிபுரம் அம்மன் ஆலயம்

பி. ப.: 4-00: பொதுக் கூட்டம் — யா/ வரணி மத்திய மகா வித்தியாலயம்

தலைவர்: திரு. கா. குணரத்தினம் அவர்கள்

பிரதம விருந்தினர்: திரு. செ.பத்மநாதன் அவர்கள் (அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. சதானந்தன்
பொருளாளர்

ச. உருத்திரேஸ்வரன்
செயலாளர்
77 வது சு.தி.கொ. விழா

(41369)



இதயங் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்!

அஜந்தாஸ் ஸ்ருடியோ

உங்கள் உடன் தேவைக்கு படம் பிடிக்க

★ தேசிய அடையாள அட்டை
★ பாடசாலைக்கான அறிமுக அட்டை
★ இதர கறுப்பு, வெள்ளை படங்களும், கலர் படங்களும் துரித கெதியில் எடுத்து கொடுக்கப்படுகின்றன.

பாஸ் வழங்கும் செயலகத்திற்கு அருகாமை
வதிரி, நெல்லியடி.

(40427)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய கிற்றார், புதிய இரண்டு பான்ட் நஷனல் பனசொனிக் றேடியோ, சிங்கர் தையல் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: T. கார்த்திகேசு, வங்களா றோட், மீசாலை தெற்கு, மீசாலை. (41360)

## மெசின் மைன்டர் தேவை

அச்சகத்திற்கு அனுபவமுள்ள பிளேட்டின் மெசின் மைன்டர் தேவை. அச்சுக் கோர்த்தல், புத்தகம் கட்டுதல் போன்றவற்றிலும் மேலதிக அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. மாருதி பதிப்பகம், புதிய சந்தை வீதி, கிளிநொச்சி. [40497]

## மணமகள் தேவை

35 வயதுடைய றோமன் கத்தோலிக்க மணமகனுக்கு சொந்தமாக வியாபாரம் செய்பவர்க்கு மணமகள் தேவை. தொடர்பு: அ. பிலிப், மணல் லேன், பருத்தித்துறை. [40424]

## மணமகன் தேவை

34 வயதுடைய பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. நட்சத்திரம் மகம், 7இல் செவ்வாய் குற்றம் உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 543, மே/பா உதயன், சரசாலை தெற்கு. [41512]

## புத்தாண்டுப் பலன்கள்

1996 — 97 தாது வருஷ கர்ம பலன்கள், கைவிசேஷம், புதிய சனி மாற்ற பலாபலன்கள் (சத்யா), பாடசாலைக் கொப்பிகள், தினசரிகளும் விற்பனையாகின்றன. மணியம் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி. (41514)

# ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் வெளியாகின

கந்த டிசம்பர் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (சாதாரண தரம்) பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப்பரீட்சை வடக்கில் நடைபெறவில்லை என்பது தெரிந்ததே. (இ-3)

# தேடுகின்றனர்

அச்செழுவைச் சேர்ந்த சின்னத்தம்பி மாஸ்டரை விடத்தல் தீவு — பள்ளமடுவில் தங்கியிருக்கும் சின்னட்டியன் செல்லன் அவரது மகன் வெள்ளையன் ஆகியோர் தேடுகின்றனர்; தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

சின்னட்டியன் செல்லன்,
மே/பா S. அருச்சுனர்,
விடத்தல் தீவு. பள்ளமடு. (40496)

# தமிழ் இனத்தின்துன்பதுயரங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெஞ்சை உருக்கும் சம்பவங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்த வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி முன்வந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இம்மண்ணின் அவலங்களை, துயர நிகழ்வுகளை நீங்கள் கட்டுரைகளாக எழுதுவதன் மூலம் எமது மண்ணின் துயர் உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துவதுடன் ஐ. நா. சபைக்கும், மற்றும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் எங்கள் நீதியைத் தெரியப்படுத்த இது ஓர் சந்தர்ப்பமாகும்.

உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

| | |
|---|---|
| வெரித்தாஸ் வாசகர் வட்டம், | வெரித்தாஸ் வாசகர் வட்டம் |
| இல. 542, | விளம்பர இல. 2, |
| C/o உதயன் பணிமனை, | C/o .உதயன் |
| சரசாலை, | கிளிநொச்சி கிளை நிலையம், |
| சாவகச்சேரி. | Y. M. C. A. கட்டடம், |
| (சி/4184) | கிளிநொச்சி. |

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 — 04 — 1939



மறைவு: 12 — 04 — 1991

## திருமதி துரைராஜா கோணேஸ்வரி

( 93, சிவன் பண்ணை றோட், கொட்டடி, யாழ்ப்பாணம் )

5 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு என்றும் மறையவில்லை. உங்கள் நினைவு, பல்லாண்டு காலம் சென்றால் என்ன, உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டகலா. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறோம்.

கணவன்,
பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
வியாபாரி மூலை,
பருத்தித்துறை. (41352)

# பிழை திருத்தம்

உ
ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்

[நாச்சிமார் கோவில்]

## வருடாந்த மகோற்சவம் - 1996

அம்பிகை அடியார்களுக்கு,

மேற்படி விழா சம்பந்தமாக 10-04-96 உதயன் பத்திரிகை விளம்பரத்தின்படி தவறுதலாக நாம் பிரம்ம ஸ்ரீ இரா. பாஸ்கரக்குருக்கள் என்று பிரசுரித்திருந்ததை திருத்தி பிரம்ம ஸ்ரீ இரா. வரதராஜக் குருக்கள் என்று வாசிக்கும் வண்ணம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
அன்னையின் சேவையில்
தர்மகர்த்தா சபை

(40425)

# வன்னியில் இயங்க அனுமதி

கிளிநொச்சி, ஏப். 12

இடம்பெயர்ந்த ப. நோ. கூ. சங்கங்கள் தமது செயற்பாடுகளை வன்னியில் விஸ்தரிப்பதற்கான அனுமதி கூட்டுறவு ஆணையாளரால் வழங்கப்பட்டிருப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு தி. இராசநாயகம் தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசத்தில் நிரந்தரமாக இயங்கிவரும் ப. நோ. கூ. சங்கங்கள் போன்று குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வந்த கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கலாம்.

இப் பகுதியில் நிரந்தரமாக இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவது போன்று மா விநியோகம் இவற்றுக்கும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த 5 கூட்டுறவுச் சங்கங்கள் வன்னியில் தமது சேவையை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது. (இ-124)


# மரியாயின் சேனை அலுவலர்களின் கூட்டம்

எதிர்வரும் ஞாயிறு 14 - 04 - 96 அன்று காலை 10 மணிக்கு, யாழ். மறைமாவட்ட யாழ். கொமிற்சியம், மானிப்பாய் கியூறியா ஆகியவற்றைச் சேர்ந்த சகல 'பிரசீடியங்களின்' ஆலுவலர்களுக்கான கூட்டம் மிருசுவில் புனித நீக்கலார் ஆலயத்தில் இடம் பெறும். தயவுசெய்து சகலரும் தவறாது சமூகமளிக்கவும்.

M. A. பிரகாசராசா,
யாழ். கொமிற்சியத் தலைவர்.

(41366)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்தியஅழைப்பும்



தோற்றம்: 01 — 11 — 1950

மறைவு: 15 — 03 — 1996

அமரர்

## செல்வராஜா இராஜரட்ணம்

(பொறியியலாளர் - பாரெயின்)

[Man. K. S. நடராஜாவின் மருமகன்]

நந்தாவில், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் கண்ணியமிக்க கணவனாய் தந்தைக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு சிவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளை வேண்டி பிரார்த்தித்து எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

எமது குடும்பத்தலைவரின் மறைவின் போது எங்கள் துயரில் பங்குகொண்டு வேண்டிய உதவிகளை புரிந்தமைக்கும் எமது நன்றியை தெரிவிப்பதோடு 12-04-96 வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

மனைவி: லீலா ஜெகமலர் செல்வராஜா,
பிள்ளைகள்: வைசாலி, சியாம்,
தாய் (லண்டன்), மாமன், மாமி,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள்.

விலாசம்:
கார்த்திகேசர் வீதி,
'புலோலி மேற்கு,
(கிராமக் கோட்டடி எரிபொருள் நிலையம்
அருகாமையில் இருக்கும் ஒழுங்கை),
பருத்தித்துறை. (சி/4180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அழுத்தக் கயிறு சுற்ற வேண்டும்

தமிழ் மக்கள்மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தக் கோரியும்—

ஸ்ரீலங்கா அரசின் அடக்கு முறைக்கு எதிராகத் தமது ஏகோபித்த உணர்வலைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறும் விதத்திலும் —

தமிழீழ மக்கள் மாபெரும் மனித சங்கிலி ஆர்ப்பாட்டப் பேரணியை நேற்று முன் தினம் நடத்தினர்.

தமிழ் மக்கள் நடத்திய பேரணியையும் மகஜரில் வேண்டப்பட்டுள்ள கோரிக்கைகளையும் பொருட்படுத்தி, செவிமடுத்து சந்திரிகா பொருத்தமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்வார் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

தமது படையினர் நடத்தும் கொடிய இராணுவ நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் உயிர் அழிவது குறித்தோ அல்லது அவர்கள் அங்கவீனர்கள் ஆகுவது குறித்தோ சந்திரிகா மனம் இரங்குவதில்லை.

அத்தகைய மன இரக்கமோ மனித நேயமோ கிஞ்சிற்றாவது இருந்திருப்பின், வலிகாமத்தின் மீதான பெரும் படை எடுப்புக்கு உத்தர விட்டிருக்க மாட்டார்.

தமிழர்களைத் தனது பிரசைகளாகக் கருதினால், சந்திரிகா, இராணுவத் தீர்வு வழியைத் தேர்ந்திருக்க முடியாது. எனவே அவர் தமது சொந்தத்தில் திருந்தி சமாதான வழிக்கு, அரசியல் வழிக்கு வருவார் என்பது குதிரைக் கொம்பே.

சர்வதேச ரீதியான அழுத்தம் மூலமே அவரது நிலைப்பாட்டை மாற்றுவிக்க முடியும். தமிழர் இன அழிப்பு, அவர்களுக்கு எதிரான மனித நேயமில்லாக் கொடுமைகள் வெளி உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட வேண்டும்.

தமிழர்களுக்கு எதிரான தனது அக்கிரமங்களை மறைத்து, தன்னை ஒரு நீதியான, நியாயமான, மனிதாபிமானமுள்ள தலைவியாக சந்திரிகா வெளி உலகத்துக்குப் பிரசாரம் செய்கிறார்.

அந்தப் பொய்ப் பிரசாரத்தைத் தோற்கடித்து வெளி உலகத்துக்கு உண்மையைச் சொல்லி அதனை சர்வதேசத்தை நம்ப வைக்கும் அளவுக்கு ஒரு தனியான இயக்கம் செயற்படவேண்டும்.

அந்த வகையில் இது போன்ற மக்கள் போராட்டங்கள் பெரும் பலனைத் தரவல்லவை. அழுதபிள்ளை தான் பால் குடிக்கும்.

தமிழர்கள் தமது வாழ்வுக்கான நீதியான, தர்மப் போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அது சர்வதேச அக்கறைக்கு உள்ளாகும் தகுதியைப்பெறக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். சர்வதேச அம்மி நகர்ந்துவிட்டால் சந்திரிகாவின் கழுத்தில் அழுத்தக் கயிறு சுற்றிக் கொள்ளப் பல காலம் செல்லாது.

# வட - கிழக்கு கூட்டுறவு செயற்பாடுகள் மீண்டும் ஆணையாளர் பொறுப்பில்

திருகோணமலை, ஏப். 12

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டு செயற்பட்டு வந்த பிரதேச செயலாளர்களின் பொறுப்பில் இருந்து வந்த சில செயற்பாடுகள் தற்போது வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதற்கான சுற்றறிக்கை ஒன்றை வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திரு. சுந்தரம் டிவகலாலா பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பியுள்ளார்.

இதன்படி கணக்காய்வு, குலைத்தல், பிணக்குகள், மாகாண, மாவட்ட மட்டத்திலான கூட்டுறவு அமைப்புக்களின் மேற்பார்வையும், அபிவிருத்தி நடவடிக்கைகளும், கூட்டுறவுக் கல்வி என்பன பிரதேச செயலர்களின் பொறுப்பில் இருந்து மீளப் பெறப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:

கீழ்வருவோர் இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்:-

யாழ்ப்பாணம் — திருமதி. கோ. திருநாவுக்கரசு, மட்டக்களப்பு — கே. பி. நாகரத்தினம், கிளிநொச்சி—எஸ். கே. சண்முகநாதன், முல்லைத்தீவு — கே. சந்திரசேகரம், மன்னார் — என். முருகேசு, வவுனியா — எம். கனகசபை

(இ-3)

## கிளிநொச்சி மாவட்டத்துக்கு பசளை எடுத்துவர முயற்சி

கிளிநொச்சி, ஏப். 12

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான பசளை வகைகள் எடுத்து வருவதற்கான முயற்சிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லைநடராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொழும்பிலிருந்து ரி.டி. எம் பசளையை எடுத்து வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து பதினேழு லொறிகளில் இப்பசளை விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று கொழும்பிலிருந்து தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார். (இ-124)

## நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி, ஏப். 12

கிளிநொச்சி மாவட்டத்தில் முறைசாராக் கல்வி போதனாசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பதவிக்கு விண்ணப்பித்தவர்களை உரிய ஆவணங்களுடன் வருமாறு கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கேட்டுள்ளார்.

(இ-3)

## கிளிநொச்சியில் பலத்த மழை

கிளிநொச்சி. ஏப். 12

நீண்ட நாள்களுக்குப்பின் கிளிநொச்சிப் பகுதிகளில் கடந்த ஞாயிறன்று பலத்த மழை பெய்தது. (இ-124)

## ஹபரண வரவில்லை

சாவகச்சேரி, ஏப். 12

நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்ட ஹபரண கப்பல் நேற்று வந்துசேரவில்லை.

15 ஆம் திகதியே அது வரும் என்று தற்போது எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் தபால் பொதிகளும் ஓய்வூதிய வவுச்சர்களும் எடுத்துவரப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-8-173)

## முறைசார கற்கை நெறி

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் எதிர்வரும் 15 ஆம் திகதி முறைசாராக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன.

இக்கற்கை நெறிகளில் பங்கு கொள்ளவுள்ள மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-124)

## தமிழினத்தின் அவலங்கள் தொடர்பான ஆக்கங்கள்

### வெரித்தாஸ் கோருகிறது

சாவகச்சேரி, ஏப். 12

தமிழ் இனத்தின் துன்ப துயரங்களை வெளியுலகுக்கு தெரியப்படுத்துவதற்காக அது தொடர்பான ஆக்கங்களை வெரித்தாஸ் வானொலி கோரியுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலங்கள், துன்ப துயரங்கள் ஆகியவற்றை தமது ஒலிபரப்புச் சேவையில் சேர்த்துக் கொள்ள முன் வந்துள்ள வெரித்தாஸ் வானொலி இதற்காக வாசகர் வட்டங்களை ஆரம்பித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது நிலையை கட்டுரை வடிவில் எழுதி மே/பா உதயன் இல. 542, உதயன் பணிமனை, சரசாலை, சாவகச்சேரி அல்லது மே/பா. உதயன், விளம்பர இல. 2, கிளிநொச்சி கிளை நிலையம், வை. எம். சி. ஏ. கட்டடம், கிளிநொச்சி ஆகிய விலாசத்துக்கு அனுப்புமாறு வெரித்தாஸ் வாசகர் வட்டம் கேட்டுள்ளது. (இ-3)

## புள்ளி விவர ஆய்வாளர் பதவி

சாவகச்சேரி, ஏப். 12

தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தில் புள்ளி விவர ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் தூய கணிதம் அல்லது பிரயோக கணிதம் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை 18 முதல் 45 வரை. விண்ணப்ப முடிவுதினம் எதிர்வரும் மே மாதம் ஆறாம் திகதியாகும்.

போட்டிப் பரீட்சை மூலம் — இனவிகிதாசாரப்படி — நியமனங்கள் வழங்கப்படும்.

மேலதிக விவரங்கள் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரதியையும், விண்ணப்பப் படிவத்தையும்—

சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடிக் கட்டடம், பருத்தித்துறை பஸ் நிலையச் சதுக்கம், கிளிநொச்சி வை. எம். சீ. ஏ. கட்டடம் ஆகியவற்றில் இயங்கும் உதயன் கிளைப் பணிமனைகளில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (அ-உ)

## ராணுவ நடவடிக்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

கடிதத்தின் முழு விவரமும் வருமாறு:-

தென்னாபிரிக்க மக்களின் விடுதலையின் பொருட்டு கொடிய இன்னல்களை எதிர்கொண்டு அரிய தியாகங்கள் செய்து அம்மக்களை வழி நடத்திய நிகழ்கால வரலாற்று நாயகனும், அரசுத் தலைவரும் என்ற முறையிலே இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தின் தன்மையை விளங்கிக் கொள்ளவும், நயக்கவும், வல்ல ஆளுமையும் ஆற்றலும் உள்ள மிகச்சிலருள்ளே தாங்களும் ஒருவராகத் திகழ்கிறீர்கள்.

இலங்கைத் தமிழர்கள் தனியானதொரு வரலாறும் தேசிய அடையாளமும், மொழியும், பண்பாடும் உடையவர்கள்.

காலனி ஆதிக்கத்தின் வருகைக்கு முன் அவர்களுக்கெனத் தனியான இராச்சியமொன்று இருந்தது. எனினும் ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் நீடித்த ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின் பின் தமிழரும் சிங்களவரும் ஓர் ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் பிணைக்கப்பட்டனர்.

பிரித்தானிய காலனி ஆட்சியாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறிய பொழுது சிங்களத் தலைமையின் நகல் முன்மொழிவுகளை மாத்திரம் கொண்டதோர் அரசமைப்பை புகுத்திச் சென்றனர். தமிழ் மக்களின் வேண்டுகோள்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன.

சிங்களவர்கள் எண்ணிக்கையில் கூடியவர்களாக இருந்தபடியால், ஸ்ரீலங்கா அரசியலில் அவர்கள் மேலாதிக்கம் பெற்றதுடன் அதனை துஷ்பிரயோகம் செய்து தமிழரை ஒடுக்கும் ஓரவஞ்சமான சட்டங்களையும் புகுத்தினர்.

தமக்கு நன்மையும், தமிழர்களுக்குத் தீமையும் விளைவிக்கும் விதத்திலே சிங்களவர்கள் அரசமைப்பை விரும்பியவாறெல்லாம் மாற்றிக் கொண்டனர். இந்த அரசமைப்பு மாற்றங்கள் தமிழரின் சம்மதத்தைப் பெற்றிருக்கவில்லை.

### அமைதி வழி முயற்சி பலனளிக்கவில்லை

தமிழர்களின் அமைதிவழிக் கிளர்ச்சிகள் அனைத்தும் இராணுவ வன்மையால் அடக்கப்பட்டன. ஈற்றில் வேறு வழி எதுவுமின்றி தமிழ்மக்கள் ஆயுதப் போராட்டத்தினால் அரசின் அடக்கு முறைகளை எதிர்க்கவும், தமது தேசிய உரிமைகளை வென்றெடுக்கவும் முற்பட்டனர்.

இக்கட்டத்தில் கூட, தமிழ் மக்களின் பிரிக்கவியலாத உரிமைகளை ஒப்புக்கொள்ளாத ஸ்ரீலங்கா அரசு, இந்த விடுதலைப் போராட்டத்தினை நசுக்கும் பொருட்டு, முறைகெட்ட யுத்தமொன்றுள் இறங்கியுள்ளது.

இந்த யுத்தத்திலே, தற்காப்பற்ற பெருவாரியான பொதுமக்கள் துவக்குச் சூட்டுக்கும், விமானக் குண்டு வீச்சுக்கும், ஷெல் வீச்சுக்கும் இரையாகி மடிகின்றனர். இன்று நாற்பதாண்டுகளாக தமிழ் மக்கள் பாரிய இடுக்கண்களுக்கு இடையிலே மாபெரும் தியாகங்கள் செய்தும், துன்பங்களைத் தாங்கிக் கொண்டும் தம் தேசிய உரிமைகளுக்காகப் பாடுபடுகின்றனர்.

இந்நிலையிலும் சர்வதேச சமூகமானது ஸ்ரீலங்கா அரசு செய்துவரும் தகவல் மறைப்புப் பிரசாரத்தின் பாதிப்புக்கு உள்ளாகி தமிழர் மீது ஏவி விடப்படும் மனித உரிமை மீறல்களையும் இராணுவக் கொடுமைகளையும் கண்டு கொள்ளாமல் இருப்பதையிட்டுத் தமிழ் மக்களின் உணர்வுகள் புண்பட்டுள்ளன.

தங்களைப் போன்ற பெருந்தன்மை வாய்ந்த தலைவரொருவர் மாத்திரமே, நமது அரசியல் விடுதலை போராட்டத்தின் நியாயப்பாட்டை விளங்கிக் கொள்ள முடியும்.

ஸ்ரீலங்கா அரசு தமிழர்களுக்கு இழைத்துவரும் பெருந்துன்பங்களையும் அவலங்களையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும்—

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கும் வண்ணமும் தமிழர் தாயகத்திலே ஸ்ரீலங்கா அரசு நிகழ்த்தி வரும் இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்தும் வண்ணமும் அவ்வரசினைத் தூண்டி இசைவிப்பதிலும் — தங்கள் நல்லெண்ணச் செல்வாக்கினை வழங்கிடுமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வு ,ாணப்படாவிட்டால்

# ,கொழும்பில் தொடர்ந்து குண்டுகள் வெடிக்கும்!

## பிரதி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 12
"இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் கொழும்பில் தொடர்ந்து குண்டுகள் வெடிக்கும். எனவே இந்தப்பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது."
— பெருந்தோட்ட பொது நிர்வாக பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்தின இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமானால் வடக்கு—கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அங்கு அவர் தெரிவித்தார். [உ-3]

# இப்படியும் நடக்கிறது

சாவகச்சேரி, ஏப். 12

இடம்பெயர்ந்த வயோதிபப் பெண்களை ஏமாற்றி பணம் பறிக்கும் சம்பவங்கள் பருத்தித்துறைப் பகுதியில் அதிகரித்து வருகின்றன.

ஒரே நபர் நான்கு பேரை ஏமாற்றிய வெவ்வேறு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கடைசியாக இடம்பெற்ற சம்பவத்தில் இடம் பெயர்ந்த பெண் ஒருவர் 120 ரூபாவைப் பறி கொடுத்தார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பிரஸ்தாப பெண்களை நெருங்கிய நபர் ஒருவர் "புனர்வாழ்வுப் பகுதியில் இருந்து உங்களுக்கு 2 ஆயிரம் ரூபா வந்திருக்கிறது. உங்கள் சரியான விலாசம் தெரியாததால் எத்தனை நாள் தேடி அலைவது ஒரு படிவத்தில் 40 ரூபா முத்திரை ஒட்டவேண்டும்" என்று கூறினாரம்.

அந்த நபரின் பேச்சில் எடுபட்ட அந்த பெண், "எங்கள் வீட்டில் மூன்று குடும்பங்கள் இருக்கின்றன அவர்களுக்கும் பதியுங்கள்" என்று சொல்ல, "அப்படி என்றால் 40 ரூபா முத்திரை மூன்று தாருங்கள் அல்லது பணம் தாருங்கள் நான் முத்திரையை வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றாராம் அந்த நபர்.

இதனை நம்பிய அந்தப் பெண் 120 ரூபாவைக் கொடுத்தார்.

முத்திரை வாங்கி வருவதாகக் கூறி பணத்துடன் சென்ற நபர் பின்னர் திரும்பிவரவே இல்லையாம். (இ)


## தர்மிசா ரவல்ஸ்

### அம்புலன்ஸ் தொடர் சேவை

கொழும்பிற்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்களினதும், வயோதிபர்களினதும் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அடையாள அட்டை இல்லாதவர்களது பதிவுகளும், 60 வயதிற்குட்பட்டவர்களது பதிவுகளும் பரிசீலிக்கப்படுகின்றன.

மீன்சந்தை வீதி,
சாவகச்சேரி.

(41367)


## மரண அறிவித்தல்

அருட்சகோதரி
**மேரி தியடோசியா மனுவேற்பிள்ளை**

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்பச் சபையைச் சேர்ந்தவருமாகிய அருட்சகோதரி தியடோசியா மனுவேற்பிள்ளை அவர்கள் நேற்று (11 - 04 - 96) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருட்சகோதரி மொறிஸ் (தி.கு.க.) அவர்களின் அருமைச் சகோதரியாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு மிருசுவிலில் திருப்பலியுடன் நடைபெறும்.

அருட்சகோதரி யோலன்ட்,
திருக்குடும்பக் கன்னியர் மடம்,
மிருசுவில்.

(41518)

ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

# 5 லட்சம் கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் 18இல்

ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகும் தமிழ் மக்களது அபிலாஷைகளை சர்வதேச அமைப்புக்களுக்கு எடுத்து இயம்பும் வகையில் யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் இணையம் மேற்கொள்ளவுள்ள-ஐந்து லட்சம் பேரின் கையொப்பங்களைச் சேகரிக்கும் — இயக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறும்.

நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக கையொப்பங்களைச் சேகரிக்கும் பணி நடைபெறும் என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இந்த கையொப்பங்கள் அடங்கிய மகஜர் அனுப்பிவைக்கப்படும் என்று யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ-3)

## வன்னியில் கூட்டுறவுப் பணி விஸ்தரிப்பு

வேலணை ப. நோ. கூ. சங்கம் வன்னி பெருநிலப்பரப்பில் தனது சங்கச் செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது.

இதன் தலைமைச் செயலகம் அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டதாக இச்சங்கத்தின் தலைவர் மாசிலாமணி தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்பில் தங்கியிருக்கும் தீவக மக்களின் நலன்களைக் கவனிக்கும் வகையில் வன்னியில் பல்வேறு இடங்களிலும் இச் சங்கம் தனது கிளைச்சங்கங்களை ஆரம்பித்துள்ளது. (இ-124)

தமிழருக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
துக்கும், ஆபத்துக்களுக்கும் அன்னியப்படுத்தலுக்கும் உள்ளாக்கி வருகின்றனர் என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

மட்டக்களப்பு...
(1 ஆம் பக்கத் தொ(டர்ச்சி)
— 1
- ★ எஸ். எல். ஆர். துப்பாக்கி — 1
- ★ ஐ.எம். ரவைகள் — 831
- ★ ஐ. எம். ரவைகள் லிங்குடன் — 420
- ★ ஐ. எம். லிங் மட்டும் — 225
- ★ 60 எம்.எம். ஷெல் — 10
- ★ பராலைட் — 4
- ★ ஏ. கே. மகசின் — 6
- ★ எஸ். எல். ஆர். மகசின் — 3
- ★ நேற்றோ ரவை — 51
- ★ கைக்குண்டுகள் — 2
- ★ ஏ.கே.எல்.எம். ஜி. றம் மகசின் — 3
- ★ ஆர். பி. ஜி. — 1
- ★ ஆர். பி. ஜி. புறப்ளர் — 1. (இ)

படை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தீவுப்பகுதிகள் தற்போது ராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும்—

இது குடாநாட்டின் மொத்த நிலப்பரப்பில் 45 சதவீதமாகும் என்றும்—இலங்கை வானொலி நேற்று தெரிவித்தது.

வலிகாமம் பகுதியில் இராணுவ நடவடிக்கை பூர்த்தி அடைந்ததும் யாழ். குடாநாட்டில் எஞ்சிய பகுதி ஒன்றின் மீது படை நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-78)

# இடம்பெயர்ந்தோருக்கு பிளாஸ்ரிக் கூரைத் தகடு

இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கென கொழும்பிலிருந்து ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கூரைத் தகடுகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இக்கூரைத் தகடுகளை எடுத்து வந்துள்ளது.

கூரைத் தகடுகள் இடம் பெயர்ந்த மக்களுக்கு விரைவில் வழங்கப்படுமென்று அறியப்படுகிறது. இவை கிளிநொச்சி மாவட்டச் செயலக வளவில் அமைந்திருக்கும் கூடாரத்தில் இப்போது களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-124)

# வன்னி செல்வோருக்கு உடனடியாக நிவாரணம்

குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற வாரம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வந்த 692 குடும்பங்களுக்கு உடன் நிவாரணமாக ஒரு கிழமைக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. தி. இராசநாயகம் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து கிளிநொச்சிப் பகுதிகளில் தங்கியிருக்கும் மக்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார். (இ-124)

முல்லைத்தீவு சம்பவத்தின் போது

# தமிழக மீன்பிடிப்படகும் தாக்குதலில் சேதம்

## மீனவர் ஒருவரும் பலி

யாழ். குடாக் கடலுக்கு வெளியே தமிழ்நாட்டு மீனவர்களது சோலர் மீன்பிடி இழுவைப் படகு ஒன்றை ஸ்ரீலங்கா வான்படையினர் தாக்கி சேதப்படுத்தி உள்ளனர்

இதில் தமிழக மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார். இரு மீனவர்கள் படுகாயம் அடைந்தனர்.

மார்ச் 30 ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படை அணி மீது கடற்புலிகள் தாக்குதல் நடத்தி டோறா படகு ஒன்றை மூழ்கடித்து இரு பீரங்கிப் படகுகளை சேதமாக்கிய சம்பவம் நடந்து சிறிது நேரத்திலேயே தமிழக மீனவர்களது சோலர்படகு தாக்கப்பட்டது. (இ-8)

# 50 ஆயிரம் கிடுகுகள் கிளிநொச்சி வந்தன

கிளிநொச்சி, ஏப். 12

வவுனியாவில் இருந்து ஐம்பதினாயிரம் கிடுகுகள் கடந்த திங்களன்று கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டன.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு லட்சம் கிடுகுகளில் இருந்தே ஐம்பதினாயிரம் கிடுகுகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இருபது லொறிகளில் வவுனியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட இக்கிடுகுகள், பிரதேச செயலகங்கள் ஊடாக இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும்.

இதேவேளை கெயர் தொண்டர் நிறுவனம் கொழும்பிலிருந்து ஐயாயிரம் செல்ரா கூரைத் தகடுகளை எடுத்து வந்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் கொட்டில்களை அமைப்பதற்கு இக்கூரைத் தகடுகள் விரைவில் வழங்கப்படுமென்று கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார். (இ-124)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 12-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org